# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS.No.31/2005** **Date: 10.02.2026**

**DW3** - தமிழரசி

சாட்சி முன்னிலையானதின் பேரில் 10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

பி.கே.பழனிசாமி எனக்கு மாமனார். அவருக்கு 28.10.1983ல் 1 முதல் 3 வாதிகள் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால், சரிதான். சர்வே எண் 308/3 மற்றும் 308/4ல் மொத்தம் 75 செண்ட் நிலத்திற்கு அந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த ஒப்பந்தம் செக்குபந்தி கண்டு எழுதப்பட்டதா என்றால், எனக்கு தெரியாது. பெரியண்ணன் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் என்றால், தெரியாது. என் மாமனார் பி.வா.சா.ஆ.6 கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றம் செய்யக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால், தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்திற்கு என் மாமனார் அல்லது மாமியார் பெயரில் பட்டா வழங்கப்படவில்லை என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எங்கள் சுவாதீனத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. 8, 13 பிரதிவாதிகள் என் மாமனார்மீது நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கேட்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. அ.வ.எண் 90/2019 வழக்கு நிலுவையில் உள்ளதாக சொல்வது பொய் என்றால், அத்தாவாவை கோப்புக்கு எடுக்க கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.6ன் அடிப்படையில் எனக்கு பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

15, 16, 18, 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

பி.வா.சா.ஆ.6ன் அடிப்படையில் எங்களுக்கு சுவாதீனம் ஒப்படைக்கப்-பட்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.6 சொத்திற்கு

மூலப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.6 ஐபற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நான் பி.கே.பழனிசாமிக்கு வாரிசு என்ற அடிப்படையில்தான் இத்தாவாவில் எதிர் வாதம் செய்கிறேன். பி.வா.சா.ஆ.6 ஒப்பந்தம் இத்தாவா 15, 16, 18, 19 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்யாததால் அவர்களை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.6 சொத்தில் எங்களுக்கு எதிரிடை பாத்தியம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. அதனால் 75 செண்ட் நிலத்தை பொறுத்தவரை நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால், சரியல்ல.

ஒப்பம்/- தமிழரசி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.